எண்ணத்தில் எழுந்த எட்டடி லிங்கம்

பிரம்மனும் விஷ்ணுவும் வணங்கிடும் லிங்கம்
பிரகாச ஒளியுடன் பேரழகு லிங்கம்
பிறவியின் துக்கம் போக்கிடும் லிங்கம்
சிரம் தாழ வணங்கும்சதா சிவ லிங்கம்

தேவர்கள் பூஜித்த தெய்வீக லிங்கம்
பாவங்கள் காமங்கள் பொசுக்கிடும் லிங்கம்
அகந்தை இராவணனை அடக்கிய லிங்கம்
சுகமாய் கருணையில் சோபிக்கும் லிங்கம்

சுகந்த மலர்களில் ஜொலித்திடும் லிங்கம்
அகத்தினில் புகுந்து ஆண்டிடும் லிங்கம்
சித்தர்கள் தேவர்கள் சிந்தித்த லிங்கம்
பக்தர்கள் பூஜிக்கும் பரசிவ லிங்கம்

தங்கமும் வைரமும் தாங்கிடும் லிங்கம்
அங்கத்தில் பாம்பினை அணிந்திடும் லிங்கம்
தக்ஷனின் யாகத்தை தகர்த்திட்ட லிங்கம்
மோக்ஷத்தை அளித்திடும் மேருவும் லிங்கம்

குங்குமம் சந்தனம் கொண்டிடும் லிங்கம்
மங்காத தாமரை மணந்திடும் லிங்கம்
அடுக்கிய பாவங்கள் அழித்திடும் லிங்கம்
எடுத்திடும் பிறவியை ஏற்றிடும் லிங்கம்

தேவரும் கணங்களும் தொழுதிடும் லிங்கம்
கவனமும் கருத்தும் கண்டிடும் லிங்கம்
கதிரவன் கோடி காட்சியாய் லிங்கம்
அதிசய வடிவாய் அமைந்திடும் லிங்கம்

எட்டு இதழ்களால் எழிலான லிங்கம்
எட்டு வறுமைகள் எரித்திடும் லிங்கம்
அண்டம் இயக்கிடும் ஆண்டவ லிங்கம்
உண்டான பொருளில் ஒளிந்திடும் லிங்கம்

குருவும் இறையும் கும்பிடும் லிங்கம்

உருவாய் மலர்களில்  ஒளிர்ந்திடும் லிங்கம்
அனைத்திலும் உயர்ந்து ஆண்டிடும் லிங்கம்
வினைகளை அறுத்து வேராகும் லிங்கம்

ஏட்டினில் எழுதிய எட்டடி லிங்கம்
பாட்டினில் அருளிடும் பரசுக லிங்கம்
சிவனின் அருளை சித்தம் பெற்று
கவலை நீங்கி களிப்புடன்  வாழ்வோம்